செ.வெ.எண்.14 நாள்: 03.04.2020

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு கூட்டம் ஜமாத் தலைவர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு கூட்டம் ஜமாத் தலைவர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.04.2020) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

டெல்லியில் இருந்து நமது மாவட்டத்திற்கு வருகை தந்த நபர்களில் சிலர் இதுவரை எந்த தகவலும் மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்கவில்லை. அவர்களுக்கு கொரோனா தொற்று பரிசோதனை செய்ய அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. இவர்களை கண்டுபிடிக்க ஜமாத் தலைவர்கள் உதவி செய்ய வேண்டும். காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் சுமார் 15 முதல் நிலை தொடர்பாளர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட காயல்பட்டணம் மருத்துவரை சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள் சுமார் 15 நபர்களுக்கு தொற்றுநோய் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொற்றுநோய் உறுதியான மருத்துவர் பல நாட்கள் நோயாளிகளுக்கு பல்வேறு சிகிச்சைகள் அளித்துள்ளார். ஒரு சமுதாய மக்களை தனிமைப்படுத்துவதாக நினைக்காமல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளை மேற்கொள்ள நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். ஜமாத் தலைவர்கள் ஒவ்வொரு வீட்டிலும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சுகாதாரத்துறை அலுவலர்கள் விபரங்களை கேட்கும்பட்சத்தில் அவர்களுக்கு தேவையான தகவல் தெரிவிக்க வேண்டும். இந்த நோய் பரவாமல் தடுக்க உங்களது ஒத்துழைப்பு கண்டிப்பாக தேவைப்படுகிறது. தனிமைப்படுத்தப்பட்ட நபர்களின் வீட்டில் முன்பாக ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கர்களை பல்வேறு நபர்கள் கிழித்துவிட்டு தெருக்களில் நடமாடுகின்ற தகவல் கிடைத்துள்ளது. இந்த நபர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்க தெரிவித்துள்ளது. சமூக இடைவெளியை பொதுமக்கள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் தெரு பகுதியில் சீல் வைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு தேவையான பொருட்கள் கிடைப்பதற்கு தன்னார்வலர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை காயல்பட்டணம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 2 நபர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே அவர்கள் குடும்ப உறுப்பினர்களை தனிமைப்படுத்தி உடல் நலம் விவரங்களை சேகரிக்கப்பட்டு வருகிறது.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் வயது வித்யாசமின்றி யாருக்கு வேண்டுமானாலும் பரவ வாய்ப்புள்ளது. ஆகவே குழந்தைகள், முதியோர்களை வீட்டில் இருந்து வெளியே வர அனுமதிக்கக்கூடாது. பொதுமக்கள் முகமூடிகளை கட்டாயமாக அணிய வேண்டும். ஜமாத் தலைவர்கள் தங்களது பகுதிகளில் ஒலிப்பெருக்கி மூலம் பொதுமக்களிடையே அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இந்த நோய் பரவாமல் தடுக்க விரைந்து நடவடிக்கை எடுத்தால் மட்டும்தான் இந்த நோயை கட்டுப்படுத்த

முடியும். அதற்கு உங்களது முழு ஒத்துழைப்பு மாவட்ட நிர்வாகத்திற்கு தேவைப்படுகிறது. உங்களுக்கு தேவையான பாஸ் உள்ளிட்ட வசதிகளை மாவட்ட நிர்வாகம் ஏற்படுத்தி தரும். காயல்பட்டணம் மருத்துவமனையில் மருத்துவ குழு மற்றும் ஆம்புலன்ஸ் தயார் நிலையில் உள்ளது. பொதுமக்கள் அதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எந்தவொரு மதம், சமுதாய பிரிவினையை ஏற்படுத்தும் நபர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே அனைவரும் மாவட்ட நிர்வாகத்திற்கு நோய் பரவாமல் இருக்க ஒத்துழைப்பு தர வேண்டும் என தெரிவித்தார்.

கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் பால கோபாலன், இ.கா.ப., கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணுசந்திரன், இ.ஆ.ப., சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., மற்றும் ஜமாத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.